Registered as a Newspaper

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள்
நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
UNICO FINANCE LTD.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை:
ரூ. 1-25

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள்
நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
UNICO FINANCE LTD.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு வைகாசி மீ 12 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 றம்ழான் பிறை 27 (26.05.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 153

★ சுதுமலை ★ மானிப்பாய் ★ வேலணை ★ சாவகச்சேரி பகுதிகளில்

ஆறு பொம்மர்கள் கூட்டாக அகோரமான குண்டு வீச்சு!

ஆலயத்துக்கு வந்தோர் உட்பட ஆறு பேர் பலி; 25 பேர் காயம்

— உதயன் செய்தியாளர்கள்: ஏ. இரத்தினராஜசிங்கம், சண். ஜோன்சன், செ. ஜீவரத்தினம், கே. கணேசலிங்கம் —

யாழ்ப்பாணம், மே 26

ஆறு பொம்மர்கள் அடுக்கடுக்காக, கூட்டாக வந்து சுதுமலை, மானிப்பாய் பகுதிகளில் அகோரத்தனமாகக் குண்டுகள் வீசி, அனர்த்தம் புரிந்தன.

அந்த அனர்த்தத்தில் ஆலயத் திருவிழாவுக்கு வந்தவர்களில் மூவர் உட்பட ஆறு பொதுமக்கள் பலியாகினர். 25க்கும் மேற்பட்டோர் காயமுற்றனர்.

மாலையில் வேலணையிலும், சாவகச்சேரியிலும் இவ்விரண்டு பொம்மர்கள் சென்று குண்டு வீச்சு நடத்தின. சாவகச்சேரியில் ஒருவர் பலியானார். பல வீடுகள் சேதமடைந்தன.

இச் சம்பவங்கள் பற்றி அறியவருவதாவது; சுதுமலை அம்மன் கோவிலடி, மானிப்பாய் அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய் வீதி, நாவடி வீதி சந்தி ஆகிய இடங்களில் அடுக்கடுக்காக பொம்மர்கள் தாக்கியதால் மக்கள் புகலிடம் இன்றித் தவித்தனர்.

பத்துக்கும் அதிகமான வீடுகள், பல கடைகள் என்பன பலத்த சேதமடைந்தன.

நேற்று நண்பகல் சுமார் 11.45 மணியளவில் பலாலியில் இருந்து ஆறு பொம்மர்களும் ஒரு ஹெலிக்கொப்டரும் அடுக்கடுக்காகக் கூட்டாக யாழ் நகர் பக்கம் நோக்கி வந்தன.

அவை யாழ்நகரில் சுமார் 10 நிமிட நேரம் பல பகுதிகளிலும் வட்டமிட்ட பின்னர் சுதுமலை, மானிப்பாய் பக்கமாகச் சென்றன. இரண்டு இடங்களிலும் ஆறு பொம்மர்களும் மாறி மாறிக் கூட்டாக அகோரமாகத் தாக்கின. அவற்றுடன் இணைந்து ஹெலிக்கொப்டரும் தாக்கத் தொடங்கியது.

சுதுமலைப் பகுதியில் விமானங்கள் நடத்திய மூர்க்கத்தனமான தாக்குதலில் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவில் கொடியேற்றத் திருவிழாவுக்கு வந்திருந்தவர்களில் நால்வர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். குண்டுகளின் சிதறல்கள் பட்டு ஆலயத்தில் நின்ற பூசகர் உட்பட இருபதுக்கும் அதிகமானோர் காயமுற்றனர்.

தாக்குதலை அடுத்து கோவிலின் மகோற்சவம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக தேவஸ்தான சபையினர் அறிவித்துள்ளனர்.

ஐஸ்பழ வான் ஒன்றின் [illegible] கடலை வியாபாரம் செய்து கொண்டிருந்த வயோதிப பெண் ஒருவரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டவர்களில் ஒருவராவார்.

ஆலய வீதியில் பல குழிகள் காணப்பட்டன. ஆலயத்தின் முன்னால் உள்ள கொட்டகை ஒன்றும் ஹெலித் தாக்குதல்களினால் பலத்த சேதமடைந்தன. மின்வயர்கள் அறுந்து தொங்குகின்றன.

இந்தப் பகுதியில் தொடர்ச்சியாகச் சுமார் அரைமணிநேரம் நடந்த குண்டு வீச்சினால் ஐந்து வீடுகள் முற்றாக சேதமுற்றன.

மாணிக்கம் மணிவாசகம் என்பவரது வீட்டு வளவினுள் நின்ற 25 க்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)



சுதுமலை, மானிப்பாய் பகுதிகளில் நடைபெற்ற மூர்க்கத்தனமான விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட அறுவரில் நால்வரின் உடல்களை படங்களில் காணலாம். (படம்-சண்)

பலாலியில் கண்ணிவெடி!

பல படையினர் பலி!!

யாழ்ப்பாணம், மே 26

நேற்றுமாலை 5 மணியளவில் ஆவளாய் சந்தியில் எம்மால் நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவ தரப்பில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன

-இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து பலாலி சென்று கொண்டிருந்த இராணுவத்தினர்மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து இராணுவத்தினரின் சிதைவடைந்த உடற்பாகங்கள், நான்கு ஹெல்மட்டுகள் உட்பட [illegible] ஆயுதங்களும் எம்மால் கைப்பற்றப்பட்டன.

-இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

முச்சந்தி முனி

அரசாங்கத்தின்ரை முழு அளவிலான தாக்குதல் ஆரம்பித்து விட்டுது என்று நேற்றுக் காட்டியிருக்கினமோ பிள்ளை...

சென்ஜேம்ஸ் பாடசாலையில் தஞ்சம் புகுந்தோருக்கு ஏற்பட்ட பயங்கரம்

நகரில் ஷெல் தாக்கி 8 பேர் பலி!

4 இளம் பெண்கள்; 4 சிறுவர்கள்: காயமுற்ற பலரும் சிறுவரே

யாழ்ப்பாணம், மே 26

யாழ் கோட்டை, மண்டைதீவு முகாம்களில் இருந்து நேற்று மாலை நடத்தப்பட்ட கொடூர ஷெல் தாக்குதலில் ஒரு சிறுமி, இரு சிறுவர், மூன்று இளம் பெண்கள் ஆகியோர் உடல் சிதறிப் பலியாகினர். ஆறு சிறுவர்கள் உட்பட பத்துப் பேர் படுகாயமடைந்தனர்.

மற்றொரு இளம் பெண்ணையும் அந்தப் பெண்ணின் ஒன்றரை மாதக் குழந்தையும் நேற்று நள்ளிரவு வரை காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது. இவர்கள் இருவரும் ஷெல் குண்டில் சிதறி அடையாளம் காணமுடியாது உருக்குலைந்து போயிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஷெல் குண்டுகளுக்குப் பயந்து யாழ் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்த போது அங்கு விழுந்து வெடித்த குண்டுகள் இவர்களின் உயிர்களைப் பலி கொண்டன.

நேற்று மாலை 4-30 மணியளவில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

முதலில் இரண்டு குண்டுகள் குருநகர் கடற்கரைப் பக்கத்தில் பயங்கர சத்தத்துடன் விழுந்து வெடித்தன.

இதனைக் பீதியுற்ற மக்கள் வீடுகளில் இருந்து விழுந்து அடித்துக் கொண்டு ஓடி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகமுயன்றனர்.

அப்பகுதி மக்களில் ஒரு பகுதியினர் யாழ் சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய கட்டடத்தில் தஞ்சம் புகுந்தனர்.

அக்கட்டடப் பகுதி மண்மூடை அடுக்கிப் பாதுகாப்பாக இருந்த போதிலும், மண்மூடைக்கும், கட்டட சுவர்ப் பகுதிக்கும் இடையில் உள்ள வெளியூடாக ஷெல் குண்டு கட்டடத்துக்குள் விழுந்து வெடித்தது.

ஐந்து வயதுச் சிறுமியான தர்சினி என்ற குழந்தையின் உடலில் நெஞ்சுக்குக் கீழ் உள்ள பகுதி சிதறி சின்னாபின்ன

(4 ஆம் பக்கம் பார்க்க)

விமான குண்டுவீச்சில் உயிரிழந்தோர்

யாழ்ப்பாணம், மே 25

சுதுமலை, மானிப்பாயில் நேற்று நடைபெற்ற விமானக் குண்டு வீச்சில் பலியானோர் விவரம் வருமாறு:-

1 தீபன் பத்மநாதன் (வயது 7 சுதுமலை)

2 வெற்றிவேலு சண்முகநாதன் (வயது 40 - காரைநகர்)

3 இவரது பத்துவயது மகன் சிவகுமார்

4 பெருமாள் சுப்பையா (வயது 60 யாழ்ப்பாணம்)

5 சுப்பு மாசிலிங்கம் (வயது 54- யாழ்ப்பாணம்)

ஆறாவது நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (உ-10)

பதுங்கு குழியில் இறந்தவர் வீட்டில் பிடுங்கிய கயவர்!

பலாலி, மே 26

எரிகின்ற வீட்டில் பிடுங்கினது லாபம் என்று நினைப்பவர்கள், அவ்வாறே செய்யும் பேர்வழிகள் இல்லாமல் இல்லை.

பதுங்கு குழியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் வீட்டில் இருந்த பொருள்களைச் சூறையாடிய கயவர்களும் நம்மிடையே இருக்கத் தான் செய்கிறார்கள்!

பதுங்கு குழிக்குள் தஞ்சம் புகுந்தபோது படையினரால் வெளியே இழுத்துப் போட்டுச் சுட்டுக் கொல்லப்பட்ட அம்பலவாணர் குடும்பத்தினரின் இறுதிக் கிரியைகள் அவரது வீட்டில் நடைபெற்ற போது, அந்த வீட்டில் இருந்த பெறுமதி மிக்க பொருள்கள் பலவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

டிக்ஸிற் திரும்பினார்

கொழும்பு, மே 26

இந்தியத் தூதர் திரு. ஜே.என்.டிக்ஸிற் ஞாயிறு இரவு புதுடில்லியில் இருந்து கொழும்பு திரும்பினார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்குப் பிரதமர் ராஜீவ் காந்தி அனுப்பிய செய்தி ஒன்றையும் திரு டிக்ஸிற் புதுடில்லியில் இருந்து கொண்டு வந்தார் என்று இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

செய்தியில் உள்ள விபரத்தை அவர் வெளியிட மறுத்துவிட்டார். (இ-ஏ)

யாழ் நிலைமை குறித்து ஆராயப்பட்டது

கொழும்பு, மே 26

தேசிய பாதுகாப்புச் சபை நேற்றுக் கொழும்பில் கூடி யாழ் குடா நிலைமை பற்றி ஆராய்ந்தது.

யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி இக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (உ-ஏ)

வல்லைவெளியில் வட்டமிட்ட அவ்ரோ

வல்வெட்டித்துறை, மே 26

அவ்ரோ விமானம், ஹெலிக்கொப்டர்கள் வல்லைவெளியின் மேல் வட்டமிட்டதால் வாகனப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன.

பனங்கூடல்கள், மரங்களுக்கு இடையில் வாகனங்களைச் செலுத்தி பயணிகளை சாரதிகள் காப்பாற்றினர். (இ-ஏ-160)

கிழக்கிலும் குண்டுவீச்சு

மண்முனையில் 10 பேர் பலி

கொழும்பு, மே 26

கிழக்கிலும் நேற்று விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை என்னும் இடத்தில் அரசப் படைகள் விமானத் தாக்குதல்களை நடத்தின. இதில் பத்து தமிழர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் தமிழ்ப் போராளிகள் என்று கொழும்பு அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ஏ)

குடாநாட்டைப் படிப்படியாக பிடித்து வருகிறோம்

அத்துலத் முதலி கூறுகிறார்

கொழும்பு, மே 26

யாழ் குடாநாட்டை படிப்படியாகப் பிடித்து வருகிறோம் --

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார் என்று யு.என்.ஐ. செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

பேச்சுவார்த்தைகளுக்கான யோசனைகளை தமிழ்த் தீவிரவாதிகள் நிராகரித்துவிட்டனர்.

அதன் காரணமாகவே இராணுவ நடவடிக்கையை எடுத்து வருகின்றோம்.

புதிய ஆயுதங்களைத் தமிழ்த் தீவிரவாதிகள் இலங்கைக்குள் கொண்டு வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாக்குநீரிணையில் இந்திய கடல் எல்லை வரை இலங்கைக் கடற்படையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்ததாக யு என் ஐ அறிவித்தது. (இ-ஏ)

சுபநேரம்

26-05-1987
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10-23 முதல் 11-53 வரை
ராகுகாலம்:-
3-53 முதல் 4-23 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
கார்த்திகை விரதம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

பனை வெல்லம் மூலம் சீனித் தேவையை சமாளிக்க முயற்சி

குடாநாட்டின் 26 சங்கங்களும் இணைந்து நடவடிக்கை எடுக்கும்

யாழ்ப்பாணம், மே 26

யாழ் மாவட்டத்திற்குத் தேவையான சீனித் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடியளவிற்கு பனை உற்பத்தியைப் பெருக்க முடியும். யாழ் மாவட்டத்திலுள்ள 26 பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களும், பனம்பொருள் அபிவிருத்திச் சபையும் இதற்காக இணைந்து செயலாற்றத் தயாராக உள்ளன.

பனம்பொருள் அபிவிருத்திச்சபை நிர்வாக உத்தியோகத்தர் திரு மு. சின்னத்துரை இவ்வாறு தெரிவித்தார்.

இன்று மக்கள் இறக்குமதிச் சீனியையே அதிகம் விரும்பி வாங்குவதால் பனைவெல்ல உற்பத்தியை அதிகரிக்க முடியாதுள்ளது.

எமது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் உள்ளூர் உற்பத்தியை ஆதரிக்கவும் நுகர்வோர் முன்வரவேண்டும்.

கொடிகாமம் பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தால் நாளொன்றுக்கு ஆயிரம் கிலோகிராம் பனைவெல்லம் தயாரிக்கக்கூடியளவு பனம் பாணி கையிருப்பில் உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-ள)

இராமகிருஷ்ண தத்துவம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 26

இராமகிருஷ்ணாலயத்தினரால் வெளியிடப்பட்ட பேராசிரியர் ப. சந்திரசேகரத்தின் "ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தத்துவம்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு திருநெல்வேலி ராமகிருஷ்ண மடத்தில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு பேராசிரியர் அ. வி. மயில்வாகனம் தலைமை வகிப்பார்.

செல்வி நந்தினி பூபாலபிள்ளை வரவேற்புரையும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரையும், பேராசிரியர் க. சிவஞானசுந்தரம் சிறப்புரையும் இராமேந்திரன் நன்றியுரையும் வழங்குவார்கள்.

ஸ்ரீமதி லட்சுமிதேவி பாலசிங்கம், செல்வி தேவகி பாலசிங்கம், ஸ்ரீமதி ஞானாம்பிகை பத்மசிகாமணி, திரு. எஸ். மகேந்திரன் ஆகியோரின் இசைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளது (உ-ள)

சமூகத்தின் முன்னேற்றத்திற்கு இளைஞர்களே மூலகாரணம்

மண்டைதீவு, மே 26

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அங்குள்ள இளைஞர்களே மூலகாரணமாவர். அவர்களின் சிறப்பான செயற்பாடுகளும் ஆக்கபூர்வமான பணிகளும் அந்தச் சமூகத்தைச் சிறக்க வைக்கின்றன.

மண்டைதீவு புனித பேதுருவானவர் இளைஞர் மன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் பங்குத்தந்தை அருள் திரு கமிலஸ் நிமலன் யோண்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

மன்றத் தலைவர் திரு. க. அகஸ்ரீன்பிள்ளை தலைமையில் விழா நடைபெற்றது.

அருள்திரு கமலஸ் நிமலன் யோண்பிள்ளை அங்கு தொடர்ந்து பேசுகையில் இளைஞர்களின் வாழ்வு அர்த்தமுள்ளதாகவும் பெறுமதி உள்ளதாகவும் இருக்க அவர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதற்கு புனித பேதுருவானவர் இளைஞர் மன்றத்தினர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவுள்ளனர்.

மக்களின் ஒத்துழைப்பிலும் ஈடுபாட்டிலும் தான் இறைவனுடைய அரசை நமது மத்தியில் பிரசன்னப்படுத்த முடியும் என்பதற்கு இவர்கள் செய்துமுடித்த பணிகள் சிறந்த முன்னுதாரணங்களாகும்.

சமுதாய வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு சமுதாயத்தை எழில்பெற வனப்புறச் செய்கின்றது என்றார்.

மற்றும் பல பிரமுகர்களும் அங்கு உரையாற்றினர்.

மன்றத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றும் நடைபெற்றது (இ-ள-88)

மக்கள் முகம்

கெருடாவில் பிரசைகள் குழு

வல்வெட்டித்துறை மே 26

கெருடாவில் பிரசைகள் குழு புதிய உத்தியோகத்தர்கள்:-

தலைவர்:- திரு த. பெரியதம்பி செயலாளர்:- திரு. விஜயகுமார் உபதலைவர்: திரு சி. துரைராசா உபசெயலாளர்: திரு. தா. சதாசிவம்.

செயற்குழு உறுப்பினர்- திரு பெ. அமிர்தலிங்கம், திரு வை. சிவலிங்கம், திரு ந. இராசகுலேந்திரன் திரு செ. அரியரத்தினம், திரு. க. அரசரெத்தினம்.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

ஒரு வாரகால விசாரணையின் பின் எச்சரித்து விடுதலை

மட்டக்களப்பு, மே 26

விமானப் படைத்தளம் விஸ்தரிப்பு ஒப்பந்த வேலைகள் செய்த மூவர் போராளிகளால் கடத்தப்பட்டு ஒருவாரகால விசாரணையின் பின்பு விடுவிக்கப்பட்டனர்.

ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு எஸ். பாலசிங்கம் (60வயது) தாமரைக்கேணி வாசியும் ஒப்பந்தகாரருமான திரு எஸ். சந்திரசேகர் (37 வயது) சின்னஊறணி வாசியான திரு ஏ. [illegible] (21 வயது) ஆகியோர்தான் இந்த மூவருமாவர்

விசாரணையின் பின்பு ஒப்பந்த வேலைகள் செய்யக்கூடாதென்ற எச்சரிக்கையுடன் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது. (இ-21)

சைவநெறி மூலம் ஆணவ இருளையும் பயத்தையும் நீக்க முடியும்

தொல்புரம், மே 26

தமிழ் மக்கள் துயருறும் இவ்வேளையிலே சைவ நெறியினை எமக்கு போதித்து இவ்வழிபாட்டின் மூலமே எம்மைச் சூழ்ந்துள்ள பயத்தையும் ஆணவ இருளையும் அகற்ற முடியும் என்று கற்பித்த சிவத்திரு. க. சுந்தரராஜா குருக்களை எமது மக்கள் சிவாச்சாரியார்களில் ஒருவராக கருதுவது முற்றிலும் பொருத்தமானதே

வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலனசபையின் செயலாளர் திரு. சி. ஞ. சந்திரமூர்த்தி இவ்வாறு கூறினார்.

தொல்புரம் ஜெகசோதி அம்பாள் ஆலயத்தில் முன்முதலாக நடைபெற்ற அலங்காரத் திருவிழாவைத் தொடர்ந்து 12 திருவிழாக்களைத் திறமையுடன் செய்த சிவத்திரு. க. சுந்தரராஜாக் குருக்களைப் பாராட்டி இந்த விழா எடுக்கப்பட்டது.

விழாவுக்கு திரு. பீ. சிவப்பிரகாசம் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் பேசிய ஏனைய பேச்சாளர்கள் பலரும் குருக்களின் கடமையுணர்வு, அடக்கம், தெய்வபக்தி, சைவ நெறிப்பற்று முதலியவற்றினைப் பாராட்டிப் பேசினார்கள்.

விழா குழுவினர் குருக்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கி கௌரவித்தனர். (இ-27)

மூதூரில் ஆஸ்பத்திரி பாடசாலைகளுக்கு மூடுவிழா நடக்கிறது

யாழ்ப்பாணம், மே 26

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர்க் கிராமத்தில் ஆஸ்பத்திரி ஒன்றையும் சில பாடசாலைகளையும் இராணுவத்தினர் மூடியுள்ளனர்

ஆஸ்பத்திரி மூடப்பட்டதால் பொதுமக்கள் வைத்திய வசதி இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

சென் அன்ரனிஸ் பாடசாலையும் சிப்பாய்களினால் மூடப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் மூதூர்க் கிராமத்தில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலை அடுத்தே இந்த மூடுவிழாக்கள் நடத்தப்பட்டுள்ளன (இ-10)

சிங்கள யுவதி கைது!

கொழும்பு, மே 26

கம்பஹா வில் உள்ள [illegible] கட்டுவைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதி ஒருவரின் வீடு பற்றிய வரைபடங்களுடன் காணப்பட்டதாகக் கூறப்படும் சிங்கள யுவதி ஒருவரை பொலிஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-ள)

Jaffna College
Institute of Technology
Vaddukoddai

DIPLOMA IN DRAUGHTSMANSHIP (Civil)

புதிய கல்வி ஆண்டு 87/88 வகுப்புக்கள் 1-7-87 இல் ஆரம்பமாகின்றன

விண்ணப்பங்கள் 31-5-87 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

G. C. E (O/L) பரீட்சையில் கணிதபாடத்தில் திறமைச் சித்தியுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

31 வயதிற்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவம் ரூபா 5/- காரியாலயத்தில் பெற்று 31-5-87க்கு முன் விண்ணப்பிக்கவும்.

— பணிப்பாளர்

பதற்றம் நிறைந்த பிரதேசமாக காங்கேசன்துறை - மாவிட்டபுரம்

காங்கேசன்துறை, மே 26

காங்கேசன்துறை, மாவிட்டபுரம் சுற்றுப்புறப் பகுதிகள் தொடர்ந்தும் பதற்றத்திற்குரிய பிரதேசமாக இருந்துவருவதால் அப்பிரதேசம் சனநடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடப்பதுடன் தொழிற்சாலைகள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

பலாலி முதல் காங்கேசன்துறை வரையான கரையோரப் பகுதியை இராணுவத்தினர் தினமும் தமது போக்குவரத்துக்கு பயன்படுத்துவதாலும்—

காங்கேசன்துறை மாவிட்டபுரம், சுற்றுப் பகுதிகளில் அடிக்கடி ஹெலிக்கொப்டர்கள் வட்டமிட்டு தாக்குதல் நடத்துவதாலும்—

இப்பகுதியில் நேரடியாக அடிக்கடி ஷெல் தாக்குதல் இடம் பெறுவதாலும் -- இப்பிரதேசம் பதற்றத்திற்குரியதாக இருந்து வருகிறது.

காங்கேசன்துறையில் இயங்கிய பல அரச அலுவலகங்கள் வேறிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன, பல இயங்க முடியாது மூடப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை இலங்கை வங்கி மூடப்பட்டு அதன் உத்தியோகத்தர்கள் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதால் வங்கி இயங்காமல் ஸ்தம்பித்துள்ளது. இதனால் ஏராளமான வாடிக்கையாளர்கள் பெரிதும் கஷ்டமுறுகிறார்கள்.

காங்கேசன்துறை மக்கள் வங்கி சுன்னாகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கிவருகிறது

காங்கேசன்துறை தபால் நிலையமும் மாவிட்டபுரத்திற்கு மாற்றப்பட்டு இயங்கிவருகிறது

மற்றும் அபிவிருத்திச் சபை உப அலுவலகம் அரசாங்க மருந்துச்சாலை சுகாதாரப்பகுதி, உணவு இலாகா ஆகியவையும் இயங்கமுடியாத நிலையில் உள்ளன. பாடசாலைகளும் இதே நிலையில்தான்

காங்கேசன்துறை சீமெந்து ஆலைகள் மூடப்பட்டுள்ளதால் சீமெந்துக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் அங்கு வேலை செய்த தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டிப் பகுதிகளில் இயங்கிய தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க கிளைகள் பல இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனைய வர்த்தக நிலையங்களும், தொழிற்சாலைகளும் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

மாவிட்டபுரம் சந்தியைச் சூழவுள்ள பகுதி மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் அடிக்கடி ஷெல்கள் வந்து விழுந்தால் கட்டடங்கள், கடைகள், மாவை ஆலயம் ஆகியன சேதமடைந்துள்ளன.

புனித இடமாக விளங்கிய இப்பிரதேசம் வெறிச்சோடிய நிலையில் உள்ளது

இச்சுற்றாடல் அடிக்கடி தாக்குதலுக்குள்ளாவதால் மக்கள் எல்லோரும் இடம் பெயர்ந்துள்ளனர். மாவிட்டபுரம் காங்கேசன்துறை பகுதிக்குச் செல்ல மக்கள் பெரிதும் அஞ்சுகின்றனர். (இ-68)

வருடாந்த பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை, மே 26

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் கல்லூரி அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

கூட்டத்துக்கான சகல நடவடிக்கைகளையும் சங்கச் செயலாளர் சைவப் புலவர் திரு. நா. க. தம்பிரத்தினம் மேற்கொண்டுவருகிறார். (இ-161)

முதலுதவிப் பயிற்சி வகுப்பு

திருநெல்வேலி, மே 26

திருநெல்வேலி பொதுமக்கள் பாதுகாப்புச் சபையினரால் இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் முதலுதவிச் சிகிச்சை வகுப்பு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு பாதுகாப்புச்சபைத் தலைவர் திரு. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும்.

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர்களும் பல்கலைக்கழக மருத்துவ ஆய்வாளர்களும் [illegible] செய்முறைப் பயிற்சி அளிப்பர். (இ-145)

வாக்காளர் இடாப்பு விண்ணப்பம்

கெருடாவில் கிராம சேவகர் பிரிவில் இடம் பெயர்ந்தோருக்கான விண்ணப்பப் படிவங்களை நிரப்பச் செல்வோரிடம் கிராம சேவகரால் வாக்காளர் இடாப்பு விண்ணப்பப் படிவங்களும் நிரப்பப்படுகின்றன. (உ-ள-16)

அகதிகளுக்கு லயன்ஸ் வைத்திய உதவி

வட்டுக்கோட்டை, மே 26

சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பினால் நடத்தப்பட்டு வரும் அகதிகள் முகாமில் தங்கி இருக்கும் 85 குடும்பங்களைச் சேர்ந்தவர்களை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தினர். தேவையான மருந்து வகைகளையும் அகதிகளுக்கு அன்பளிப்பாக வழங்கினர்.

பிரஸ்தாப முகாமில் இருக்கும் அகதிகள் பெரும்பாலோர் சொறி, சிரங்கு, வயிற்றோட்டம் முதலான பல நோய்களால் அவதியுறுகின்றனர்

அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் இணைச்செயலாளர்கள் திரு க. உபேந்திரன், திரு. எம். கணேஸ் ஆகியோர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எமில் அந்தோனிப்பிள்ளை உதவி மாவட்ட ஆளுநர் டாக்டர் ரீ. [illegible]லும் முகாமுக்குச் சென்று வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இந்த வைத்திய பரிசோதனையின் போது இருமல், வயிற்றோட்டம், சொறி, சிரங்கு போஷாக்கின்மை, பயம் முதலானவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய மருந்துகளை அன்பளிப்பாக வழங்கினர்.

இவர்களுடன் [illegible] திரு. என். குணபாலசிங்கமும் உதவியாளர் திரு எஸ் நாதனும் கடமையாற்றினர்.

இந்த வைத்திய பரிசோதனையின்போது அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் இயக்குனர் விவசாயமன்னன் வீரசிங்கமும் இணைச்செயலாளர்கள் திரு க. உபேந்திரன் ஆசிரியர், திரு எம். கணேஸ் ஆகியோரும் கூடவே இருந்தனர் (இ-வ-161)

முதியவர் பூஸாவிற்கு

மட்டக்களப்பு, மே 26

போராளிகளுக்கு உதவி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மார்ச் மாதம் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்ட முதியவர் ஒருவர் மேல் விசாரணைக்காக பூஸாவுக்கு அனுப்பிவைக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அக்கரைப்பற்று 7ஆம் குறிச்சி வாசியும் பிரபல போடியாருமான செல்லராஜா (57 வயது) என்பவர்தான் அந்த நபர் ஆவார்.

உறவினர்கள் அக்கரைப்பற்று பிரசைகள் குழுவிடம் தொடர்பு கொண்டனர்.

பிரசைகள்குழுச் செயலாளர் ஜனாப் ஏ. அகமது லெப்பை முகாம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோதே பூஸாவுக்கு அனுப்பி வைக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதாம்.

விளையாட்டரங்கு

ஜெற் லைனர்ஸ் விளையாட்டுக்கழக கிரிக்கெட், கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 26

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய 16 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு ஜெற் லைனர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட், கரபந்தாட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

7 பேர் பங்குகொள்ளும் 12 ஓவர்களைக்கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியும் 6 பேர் பங்குகொள்ளும் கரபந்தாட்டப் போட்டியும் நடத்தப்பட உள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் கழக அணிகள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்

விண்ணப்பங்களை செயலாளர் ஜெற் லைனர்ஸ் விளையாட்டுக்கழகம், கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் கொழும்புத்துறை என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-7)

சிறுவர் விளையாட்டு போட்டி

மானிப்பாய், மே 26

தென் இந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீன சத்தியபுரம் சிறுவர் பராமரிப்பு நிலையப் பிள்ளைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் மாதம் 6 ஆம் திகதி சத்தியபுரம் சிறுவர் பூங்கா மைதானத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் திருச்சபையின் வருடாந்த ஸ்தோத்திர விற்பனை விழாவும் நடைபெறும்

கிறிஸ்தவ வாலிபர் சங்கம் மாதர் சங்கம் ஆகியவை இணைந்து இவ்விழாவினை நடத்துகின்றனர். (உ9 0)

அரியாலை சனசமூக நிலைய மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், மே 26

அரியாலை சனசமூக நிலையம் 58 ஆவது ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

7 பேர் பங்குகொள்ளும் 12 ஓவர்களைக் கொண்ட இந்த போட்டிக்கான விண்ணப்ப முடிவு இம்மாதம் 30ஆம் திகதி ஆகும்.

விண்ணப்பங்களை விளையாட்டுச் செயலாளர், அரியாலை சனசமூக நிலையம் புங்கங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் (இ-7)

பம்பாய் வெங்காய உற்பத்தியாளருக்கு 2 வருடக் கடன்

யாழ்ப்பாணம், மே 26

பம்பாய்வெங்காய உற்பத்தியாளர்களுக்கு இரு வருடக்கடன் வழங்கப்படவுள்ளதாக அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு. நா. குமாரசாமி தெரிவித்தார்.

ஒரு ஏக்கருக்கு 6,750 ரூபாவீதம் இலங்கை வங்கியின் [illegible] இக்கடன் உதவி வழங்கப்படவுள்ளது.

இந்தக்கடனைப் பெறுவதற்கு உற்பத்தியாளர்கள் விவசாய அலு

(4-ம் பக்கம் பார்க்க)

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வல்லிபுரம் சாத்திரியாரின் மகன்

இரத்தினசிங்கம்

ஆண்டவன் படைப்பு: 28 - 7 - 1948
அரசன் அழிப்பு: 6 - 6 - 1986

எங்கள் குடும்ப விளக்கு அணைந்து ஓராண்டு ஆகியும் மனம் கலங்குகின்றோம் உங்கள் ஆன்மா சாந்தி அடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், சகோதரன்,
சகோதரிகள், உற்றார், உறவினர்.

பாரதி சனசமூக நிலையம்,
கம்பர்மலை. (1340)

உதய சங்கற்பம்

உண்மையை உணர்ந்து ஊறிய உள்ளம் உடையவரை வெளிக் குமுறல்கள் பாதிக்க மாட்டா.

— ஜேம்ஸ் ஆலன்.

உதயன்

இல. 898/2, நாவலர் வீதி, தொலைபேசி: 24805
யாழ்ப்பாணம். 22073
26-05-1987 த.பெ. இல. 88

தவிர்க்க முடியாதது அது!

யாழ்ப்பாணக் குடாநாட்டின் இந்த வாரத்தில், முன்னர் எப்போதும் இல்லாதவாறு மிகப் பயங்கரமான — பெரும் அளவிலான இராணுவத் தாக்குதல் நடத்தப்படுமாம்.

தரை, கடல், வானம் ஆகிய மூன்று முனைகளில் இருந்தும் தாக்குதல் நடத்துவதற்குத் தேவையான துருப்புகள், கப்பல்கள், விமானங்கள் என்பன குடாநாட்டுக்கு வந்து விட்டனவாம். பெரும் தாக்குதல் நடத்துமாறு படையினருக்குப் பச்சை விளக்கும் காட்டியாயிற்று.

பொம்மர்கள், ஹெலிகள் கடந்த இரண்டு மூன்று நாட்களாக குடாநாட்டின் எல்லாப் பகுதிகளையும் கழுகுக் கண்களால் நோட்டம் பார்த்து வருகின்றன. ஹெலிகள் பல இடங்களில் தாக்குதல்களை நடத்தியும் வருகின்றன.

பொம்மர் நேற்று நவாலி மானிப்பாயில் தாக்குதல் நடத்தியதால் ஆறு பேர் பலியாகினர்.

அகோரத்தாண்டவம் ஒன்றைப் புரிவதற்குச் சட்டரீதியாக ஆரவாரம் செய்யப்படுகிறது. ஆம்! குண்டு வீசியும், ஷெல் அடித்தும், பீரங்கி முழக்கியும் வீட்டில் இருக்கும் வேளையிலும், வீதியால் செல்லும் வேளையிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழர்களைக் கொல்வதற்குக் கட்டியம் கூறப்படுகிறது. இதுவரை காலமும் சிறிய அளவில் தாக்குதல் நடத்தியதாகவும், இனித்தான் பெரிதாகச் செய்யப் போவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

தமிழர்களைத் தனது ஆட்சிக்கு உட்பட்ட மக்களென்றே அரசு இன்னும் சொல்கிறது. ஆனால் ஆயிரத்து ஐநூறு கோடி ரூபா செலவில் அவர்களுக்கு அனர்த்தம் விளைவிக்கக் கச்சைகட்டி நிற்கிறது அது. அவர்களைக் கொல்வதற்குப் போர்ப் பறையும் அடிக்கிறது.

தமிழ் மக்களைக் கொல்வதற்கு வேண்டிய வலிமையும், திடசாத்திரமும் அரசுக்கு எங்கிருந்து வந்தன? இராணுவ பலம் முறுக்கேறியது எப்படி?

வெளிநாடுகள் கொடுத்த கடன் பணமே எல்லாவற்றுக்கும் முழுமுதற் காரணம். அரசாங்கம் தமிழ் மக்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கிறது; அவர்களைக் கொல்கிறது; அவர்களை அகதிகளாக்குகிறது; அவர்களை அநாதைகளாக்குகிறது; மொத்தத்தில் இன ஒழிப்புச் செய்கிறது. இவை யாவும் தெரிந்தும் ஸ்ரீலங்கா அரசுக்கு நிதி உதவி வழங்கி அதன் இராணுவ பலத்தை வலிமையாக்குவதற்கு உதவியவர்கள் யார்? ஏகாதிபத்திய சக்திகள்! அதில் சிறிதளவும் ஐயமில்லை.

உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் ஏகாதிபத்தியத்தின் வார்ப்புகளே!

இதனை நன்கு அறிந்து கொண்ட ரஷ்யா இங்குள்ள நிலைமையைச் சரியாக எடை போட்டுள்ளது.

ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதற்கு ஏகாதிபத்திய சக்திகளின் தலையீடு முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது என்று ரஷ்ய வானொலி சரியாகச் சொல்லி உள்ளது.

அணிசேரா நாடான ஸ்ரீலங்கா, தனது ஆயுத பலத்தை அதிகரிப்பதற்கு, ஏகாதிபத்திய வாதிகளின் தயவில் இருக்கிறது. அதனால்தான் அங்கு வன்செயல்கள் அதிகரிக்கின்றன என்று அச்சொட்டாக விமர்சித்திருக்கிறது ரஷ்ய வானொலி.

அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளான பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் மேல்நாட்டுக் கூலிப்படைகளும் ஸ்ரீலங்கா அரசுக்கு உதவுகின்றன.

ஆனால் அழகிய ஸ்ரீலங்காத் தீவின் பிரச்சினைகளுக்கு அமைதித் தீர்வு காணப்பட்டு, சமாதானம் நிலவ வேண்டும் என்பதே ரஷ்யாவின் விருப்பமாகும்— என்றும் அந்த விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஏகாதிபத்திய சக்திகளின் நட்பு, உதவி ஒத்தாசை என்பன ஸ்ரீலங்கா அரசைத் திடசாத்திரமாக்கி முறுக்கேற்றி வைத்திருக்கின்றன.

இந்த உண்மையை ரஷ்யாவைப் போல ஏனைய சமாதானம் விரும்பும் நாடுகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்விடயத்தைச் சர்வதேச அரங்குகளில் அம்பலப்படுத்தி அரசாங்கத்துக்கு உதவுவதைத் தடுக்க வழி பார்க்க வேண்டும். அது இயலாவிடின் தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை அங்கீகரித்து அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

இரண்டாவதைச் செய்வதன் மூலம் ஸ்ரீலங்கா வெளிநாட்டு சக்திகளின் யுத்த களமாகும் என்பது உண்மைதான். ஏகாதிபத்திய வாதிகள் ஸ்ரீலங்காவுக்கு உதவுவதை நிறுத்தாதவரை, அது தவிர்க்க முடியாததாகும்.

வதந்தியால் மக்கள் வெளியேறினர்

வட்டுக்கோட்டை, மே 26

வெள்ளிக்கிழமை இரவு 1 மணி அளவில் சித்தன்கேணி, வட்டுக்கோட்டைப் பகுதியில் திடீரெனப் பரவிய வதந்தியால் சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, சிவன் கோவிலடி, கல்நார்ப் பகுதி மக்கள் இரவோடு இரவாக வீடுகளை விட்டு வெளியேறினர்.

அதிகாலை 3 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட இருப்பதாக வதந்தி பரவி இருந்தது.

இரவு 1 மணி அளவில் பலர் தமது உடைமைகளை விட்டு விட்டு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துக் கொண்டு அராலி, காரைநகர் பகுதிகளுக்குச் சென்றனர். (இ-161)

★ காட்டுத் தீ அடங்குமுன்பு

சீனாவில் பெரு வெள்ளம்!

90 பேர் உயிரிழந்தனர்

பீகிங், மே 25

நீரும், நெருப்பும் சீனாவில் பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளன என்று அறிவிக்கப்படுகின்றது.

பதினாறு தினங்களுக்கு மேலாகப் பரவி வரும் தீயைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருக்கும் சீனாவில், ஞாயிறு ஏற்பட்ட பெரிய வெள்ளத்தில் 90 பேர் உயிரிழந்தனர். 400 பேர் வரை காயமடைந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கன்டோன் பட்டினத்துக்குச் செல்லும் வீதி, வெள்ளத்தினால் அள்ளுண்டு போனதாக அறிவிக்கப்படுகின்றது.

அடைமழை காரணமாக நாலு ஆறுகள் சீனாவின் தென்மாகாணமான குவாங்டாங்கில் பெருக்கெடுத்தன.

இதனால் மின்நிலையங்கள் சேதமடைந்தன. சுமார் ஒன்றரை லட்சம் ஹெக்டேர் பயிர் வெள்ளத்தில் மூழ்கியது.

மூன்றரை லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு போகப்பட்டனர்.

இதற்கிடையில் காட்டுத் தீயினால் இறந்தோர் எண்ணிக்கை 200 ஆக அதிகரித்திருக்கிறது.

காட்டுத்தீ பரவும் பகுதியிலும் பெருமழை பெய்ய ஆரம்பித்துள்ளது. 6 லட்சம் ஹெக்டேர் காணி காட்டுத் தீயினால் சேதம் அடைந்துள்ளது. (இ-எ)

முன்னாள் மந்திரி வி. பி. சிங்

இந். காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட மாட்டார்

புதுடில்லி, மே 25

இந்திரா காங்கிரஸில் இருந்து முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் விஸ்வநாத் பிரதாப் சிங்கை வெளியேற்றுவது இல்லை என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இந்திரா காங்கிரஸ் காரியக் கமிட்டி நேற்றுக் கூடி இத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

திரு.வி.பி.சிங்கைக் கட்சியின் ஆரம்ப உறுப்பினர் பதவியில் இருந்து வெளியேற்றுவது என்ற அலகாபாத் இந்திரா காங்கிரஸ் கமிட்டி எடுத்த தீர்மானமும் காரியக் கமிட்டியினால் நிராகரிக்கப்பட்டது.

திரு சிங்கையும் அவரின் ஆதரவாளரான எம். எல். ஏ. ஒருவரையும் வெளியேற்றுவது என்று அலகாபாத் கிளை தீர்மானித்து இருந்தது.

எம்.பிக்களை கட்சியில் இருந்து வெளியேற்றும் உரிமை கிளைகளுக்குக் கிடையாது என்று இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் அறிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து விலகிய பின்னர் திரு.வி.பி.சிங் வெளியிட்ட தகவல்கள் சில இந்திரா காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் அதிருப்தியை உருவாக்கி உள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

தென்னாபிரிக்காத் தொடர்பு:

சுவீடன் முறித்தது

ஸ்டொக்ஹோம், மே 25

தென் ஆபிரிக்காவுடனான வர்த்தக உறவுகளை முற்றாகத் துண்டிப்பது என்று சுவீடன் தீர்மானித்துள்ளது.

சுவீடன் நாடாளுமன்றத்தில் இது சம்பந்தமான பிரேரணை கடந்த வெள்ளி நிறைவேற்றப்பட்டது.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இத் தீர்மானம் அமுலுக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (உ-எ)

உத்தரப்பிரதேச கலவரம் பரவுகின்றது

புதுடில்லி, மே 25

உத்தரப்பிரதேச மாநிலத்தில் இந்து- முஸ்லிம் கலவரம் மேலும் பல கிராமங்களுக்குப் பரவியதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த சனி இரவு இடம்பெற்ற பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் பத்து முஸ்லிம் கிராமத்தவர் உயிரிழந்தனர்.

ஆயுதப்படையினரால் ஊரடங்கு நேரத்தில் வீடு வீடாக தேடுதல் நடத்தப்பட்டது.

அச்சமயம் பலதரப்பட்ட ஆயுதங்கள், குண்டுகள் கைப்பற்றப்பட்டன. (உ-எ)

சோவியத் யூனியனில் "வோய்ஸ் ஒப் அமெரிக்க" ஒலி பரப்புகள்

மாஸ்கோ, மே 25

வோய்ஸ் ஒப் அமெரிக்கா ஒலிபரப்புக்கள் சோவியத்யூனியனில் இப்போது தெளிவாகக் கேட்கின்றன என்று அறிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க ஒலிபரப்புக்களை ரஷ்யா இது காலவரை குழப்பியடித்து வந்தது.

இப்போது குழப்புவதை ரஷ்யா நிறுத்தி விட்டது போல் தெரிகிறது என்று பி.பி.சி அறிவித்தது.

பி.பி.சி ஒலிபரப்பு மீது விதித்து இருந்த தடையை அண்மையில் தான் ரஷ்யா நீக்கியது.

கடந்த 7 ஆண்டுகளாக பி.பி.சி. மீது இத்தடை விதிக்கப்பட்டிருந்தது (இ-எ)

வெளி உலகில்

குவைத் கப்பல்களுக்கு அமெரிக்க பாதுகாப்பு குறித்து ஈரான் மீண்டும் எச்சரிக்கை

தெஹ்ரான், மே 25

வளைகுடாவில் குவைத் கப்பல்களுக்கு அமெரிக்க கப்பல்கள் பாதுகாப்பு வழங்குவது குறித்து ஈரான் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக்கிடம் இருந்து எண்ணெயைப் பெற்றுச் செல்லும் எந்த நாட்டுக் கப்பல்களும் ஈரானின் தாக்குதலில் இருந்து தப்பிக்க முடியாது என்றும் ஈரான் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதனிடையில் வளைகுடாவில் அமெரிக்கக் கடற்படைக்கு உதவ நேசநாடுகள் முன்வர வேண்டும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் காஸ்பர் வீய்ன்ஸ் பேர்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலுக்கு ஆளான அமெரிக்கக் கடற்படைக் கப்பல் ஸ்டாக்கில் 37 வீரர்கள் உயிரிழந்த சம்பவம் பற்றி 3 பேர் கொண்ட அமெரிக்க அதிகாரிகள் குழு ஒன்று வளைகுடா சென்று விசாரணை நடத்துகின்றது.

அந்தக் குழுவில் விண்வெளி வீரரான ஜோன் கிளென் என்பவரும் உறுப்பினராக இருக்கிறார். (இ-எ)

இறந்தோர் எண்ணிக்கை

75 ஆக அதிகரிப்பு

புதுடில்லி, மே 25

பழைய டில்லியும் உத்தரபிரதேசத்தின் மீரட்டிலும் இடம்பெற்று வரும் இந்து- முஸ்லிம் மோதலில் இதுவரை 75 பேருக்கு மேல் உயிரிழந்தனர் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

நூற்றுக்கு அதிகமானோர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 2 ஆயிரம் பேர் வரையில் கைது செய்யப்பட்டனர்.

இதனிடையில் மீரட் நகரினுள் முஸ்லிம் மதத் தலைவர்கள் பிரவேசிப்பது தடுக்கப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டம் வாரணாசிக்கும் விஸ்தரிக்கப்பட்டது. (இ-எ)

ஹரியானாவில் 1,500 வேட்பாளர்கள்

சண்டிகார், மே 25

ஹரியானா மாநில சட்டசபைத் தேர்தலில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வது இன்று (திங்களு) டன் முடிவடைந்தது.

90 ஆசனங்களுக்கு சுமார் 1,500 வேட்பாளர்கள் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

தேர்தல் அடுத்தமாதம் 17ஆம் திகதி நடைபெறும். (இ-எ)

லண்டனில் நட்வர்சிங் பேச்சுவார்த்தை

லண்டன், மே 25

பிஜிப் பிரச்சினை குறித்து இந்திய இணை அமைச்சர் நட்வர்சிங் லண்டனில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜிப்ரி ஹோவுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

பிஜியில் இராணுவப் புரட்சி நடத்திய லெப்டினன்ட் கேர்ணல் ரபுகாவின் இனவெறிப் பேச்சுக்கள் குறித்து திரு. நட்வர்சிங் பிரிட்டிஷ் அமைச்சரிடம் கவலை தெரிவித்தார்.

பிஜி பற்றி பிரதமர் காந்தி அனுப்பிய கடிதத்துக்கு பிரதமர் தாட்சர் பதில் அனுப்ப இருக்கிறார் என்று பிரிட்டிஷ் அமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல் பகுதிகளில் அச்சுவேலி அகதிகள்

வட்டுக்கோட்டை, மே 26

அச்சுவேலியில் இடம்பெற்ற பயங்கர இராணுவத் தாக்குதலால் இரவோடு இரவாக கால்நடையாக இடம் பெயர்ந்து வந்த சுமார் 200 குடும்பங்கள் பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் அச்சுவேலிப் பகுதியில் இராணுவத்தினரால் பலத்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் இடம்பெயர்ந்தனர்.

பிள்ளைகள் முதியோர் சகிதம் கைக்குழந்தைகளையும், அத்தியாவசியப்பொருள்களையும் சுமந்தவண்ணம் இரவோடிரவாக கால்நடையாக இவர்கள் இடம்பெயர்ந்து வந்திருந்தனர்.

அகதிகளாக வந்த 200 குடும்பத்தினருக்கும் உதவி புரிவதற்கு பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல்பகுதி பொதுஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன. (இ-ஊ-161)

சமய சந்திகளில்

நயினாதீவு ஞானவைரவ மூர்த்தி கும்பாபிஷேகம்

நயினாதீவு, மே 26

நயினாதீவின் தென்பால் வங்களாவடி மணற்புலத்தின் கண் அமர்ந்த அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவ மூர்த்தியின் ஆலய ஆவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை வெகு சிறப்பாக நடைபெற இருக்கின்றது.

இம்மாதம் 29 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் ஊர் சுற்று வைபவமும்—

31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி 30 நிமிடம் முதல் எண்ணெய்க்காப்புச் சாத்தலும் நடைபெறும். (இ-143)

நாவலடி காளிதேவி கோவிலில்

கொடிகாமம், மே 26

திங்கட்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் கொடிகாமம் நாவலடி அருள்மிகு காளிதேவி கோவிலில் மக்கள் நலன் கருதி பூசை பிரார்த்தனை நடைபெறுகிறது. (இ-75)

திருநெல்வேலி சிவன் கோவிலில்

திருநெல்வேலி, மே 26

திருநெல்வேலி சிவன் கோவிலில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8-00 மணிக்கு இரதோற்சவம் நடைபெறும்.

நாளை புதன்கிழமை தீர்த்த உற்சவமும், நாளை மறுநாள் வியாழக்கிழமை பூங்காவனமும் நடைபெறும்.

பத்திரகாளி அம்மன் கோவிலில்

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு பிரதம குரு சிவஸ்ரீ க மகாகணபதீஸ்வரக் குருக்கள் அவர்களால் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் சிறப்பாக உற்சவம் நடைபெறும்.

ஜூன் ஏழாம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்த[illegible]வும், 10 ஆம் திகதி [illegible] மும் நடைபெறும். (இ-143)

அரசு இல்லாத இடத்தில் ஆண்டவன் இருக்கிறார்

ஆத்மஜோதி முத்தையா உரை

சாவகச்சேரி, மே 26

தமிழ் மக்கள் தமது துயரங்களை முறையிட அவர்களுக்கென்று ஓர் அரசு இல்லை. ஆண்டவன் ஒருவரே இருக்கிறார்.

ஆத்மஜோதி நா. முத்தையா இவ்வாறு கூறினார்.

சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற கூட்டுப் பிரார்த்தனை வைபவத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் பேசியதாவது:-

மக்கள் துன்பம் வரும் போது தமக்கு மேலான இடத்திலேயே முறையிடுவர்.

குழந்தை தாயிடத்திலும் மனைவி கணவனிடத்திலும் மக்கள் அரசிடமுமே முறையிடுவர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் துன்பங்களை, துயரங்களை முறையிட அரசே இல்லை. ஆண்டவன் ஒருவரே எம்மவருக்கும் இருக்கிறார் என்றார்.

நாட்டுக் கூத்து

வட்டுக்கோட்டை, மே 26

வட்டுக்கோட்டை கிழக்கு கல்நகர் பிராட்டுவளவு ஞான[illegible]தேவி சமேத ஞானவைரவர் ஆலய மணவாளக் கோல விழா ஜூன் முதலாம் திகதி திங்கட்கிழமை நடைபெறுவதை முன்னிட்டு இம்மாதம் 31 ஆம் திகதி [illegible] கூத்து நடைபெறவுள்ளது. (இ-161)

ரமழான் சிந்தனை

உடல் நலம் இருக்கும் போதும், வசதியுடன் செல்வம் சேர்க்கும் போதும், பணக்காரனாக வேண்டும் என்று விரும்பும் போதும் தர்மம் செய்ய வேண்டும்.

வாசகர் திருமுகம்

மண்டைதீவுப் பாடசாலை குறைகளைத் தீருங்கள்

மண்டைதீவுப்பகுதியில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சைவப்பெரியரும் சமூகத் தொண்டருமாகிய அமரர் கார்த்திகேசு என்பவர் இப்பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தனது சொந்தப்பணத்தில் ஒரு பாடசாலையை நிறுவினார்.

இன்று அப்பாடசாலையை அரசினர் பொறுப்பேற்று கார்த்திகேசு வித்தியாலயம் என்ற பெயரில் நடத்தி வருகின்றனர்.

தற்பொழுது ஆரம்ப வகுப்பு மாணவர் படிக்கும் பாடசாலையாக இது விளங்குகின்றது.

இதைத் தரமுயர்த்தி, உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக மாற்ற வேண்டும் என்பதே இப்பகுதிப் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் விருப்பம் ஆகும்.

நீண்ட நாட்களாக இப்பாடசாலையில் நிலவி வரும் இடவசதியின்மை, ஆசிரியர் பற்றாக்குறை போதிய தளபாடங்கள் இன்மை ஆகிய குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

இப்பாடசாலையின் ஆரம்பகால கட்டடம் ஒன்று இடிந்து விழுந்து பல வருடங்கள் ஆகின்றன. இதற்குப் பதிலாக இன்றுவரை புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படவில்லை.

யா. மா. அபிவிருத்திச் சபையின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து இப்பாடசாலைக்கு சகல வசதிகளுங்கொண்ட இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று அமைப்பதற்குப் பணம் ஒதுக்க வேண்டும்.

மு. நவரத்தினராஜா
(முன்னாள் கிராம அதிகாரி)
மண்டைதீவு.

தடையை நீக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 26

பொது மக்களின் நன்மைகருதி தூரசேவையில் ஈடுபடும் மினிபஸ்கள் மீது ஆனையிறவுமுகாமில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க முயற்சி செய்யுங்கள்.

இப்படி வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கத் தலைவர் திரு. பொன் மதிமுகராசா யாழ் கிளிநொச்சி அரசாங்க அதிபர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார். (இ-வ)

பொய்யாமொழி

குறள்:

நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

பொருள்:

அவரவருடைய இயல்புகளை அறிந்து அவரவர்க்குப் பொருந்துமாறு செய்யாவிட்டால், நன்மை செய்வதிலும் தவறு உண்டாகும்.

TOEFL புதிய பிரிவு
by
S.B. IYAR
ஆரம்பம்: 30-5-87
சனி, ஞாயிறு
காலை 6 மணி — 8 மணி
12, வைமன் வீதி, நல்லூர்.

உதயன்
26 . 05 . 1987 செவ்வாய்க்கிழமை

SPOKEN ENGLISH
by
S. B. IYAR
புதிய பிரிவு ஆரம்பம் 01.06.87
காலை 6 மணி — 7 மணி
திங்கள், புதன், வெள்ளி
12, வைமன் வீதி,
நல்லூர்.

மத்திய அரசின் அனுமதி பெற்றே இலங்கைத் தமிழருக்கு நிதி ஒதுக்கப்பட்டது

அமைச்சர் பண்ருட்டி கூறுகிறர்

சென்னை, மே 26

மத்திய அரசின் அனுமதி பெற்றே, பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழருக்கு உதவ தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி இராமச்சந்திரன் நான்கு கோடி ரூபாவை (இந்திய ரூபா) ஒதுக்கினர்.

தமிழ்ப் போராளிகளுக்கு இந்த நிதி வழங்கப்படவில்லை

இப்படி தமிழ்நாடு உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் சென்னையில் கடந்த ஞாயிறு அறிவித்தார்.

தினத்தந்தி நாளிதழ் ஸ்தாபகர் சி பா ஆதித்தனாரின் ஆறாவது நினைவு தினத்தை ஒட்டி ஞாயிறு நடந்த வைபவம் ஒன்றில் அவரின் சிலையை பண்ருட்டி இராமச்சந்திரன் திரைநீக்கம்செய்து வைத்தார்.

அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் மேலும் சொன்னதாவது:-

பொருளாதார முற்றுகையினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழருக்கு சேவை நிறுவனங்கள் மூலம் நிவாரணம் வழங்குவதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படுகின்றது

அண்டைநாடு ஒன்று இப்படிச் செய்யலாமா என்று இலங்கை வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீது கேட்டிருக்கிறார்

தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரவேல், சீனு ஆகிய நாடுகள் இந்தியாவுக்கு எதிரான நாடுகள். அவற்றிடம் இருந்து ஆயுத உதவி பெற்று தமிழருக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றது

இது இந்தியாவுக்கு எதிரான செயல் இல்லையா?

இலங்கைத் தமிழருக்கு முதலமைச்சர் ஒதுக்கிய பணம் அரச நிதி அல்ல ஆனல் இப்பணத்தைக் கொடுப்பதற்கு மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டது.

இப்படி பண்ருட்டி இராமச்சந்திரன் சொன்னர்.

முதலமைச்சர் திரு. எம் ஜி இராமச்சந்திரன் தமது தலைமையுரையில், ''இலங்கைத் தமிழருக்காக முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே குரல் கொடுத்தவர் அமரர் ஆதித்தனர்'' என்று தெரிவித்தார்.

தமிழ் வளர்ச்சி உயர் மட்டக் குழுத் தலைவர் திரு. ம பொ சிவஞானகிராமணியார் பேசுகையில், 'யாழ்நாடு சுடுகாடாக மாறுவதற்கு முன்னர் பிரதமர் ராஜீவ் காந்தியும் முதலமைச்சர் இராமச்சந்திரனும் சேர்ந்து ஏதாவதுசெய்ய வேண்டும்' என்று சொன்னர்.

1942 இல் தினத்தந்தி வெளிவந்தபோது முதல் பிரதியை வாங்கிய முத்தமிழ்க் காவலர் கி ஆ. பெ விசுவநாதமும் இவ்வைபவத்தில் பேசினர்

இந்திரா காங்கிரஸ் பிரமுகர் குமரி அனந்தனின் வேண்டுகோளின் பேரில் எல்லிஸ்ரோடுக்கு 'ஆதித்தனர் சாலை'' என்று முதலமைச்சர் பெயர் சூட்டினர்.

(இ-ஏ)

மட்டக்களப்பில் குண்டு வீச்சு

கொழும்பு மே 26

மட்டக்களப்பில் வவுணதீவு உதவிஅரச அதிபர் பிரிவில் உள்ள வட்டுசெட்டிமடு என்ற இடத்தில் கடந்த ஞாயிறு அதிரடி விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று அறிவிக்கப்படுகிறது

குண்டு வீச்சில் கொக்கட்டிச்சோலையில் வயல் வாடிகள் எரிந்தன என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ-ஏ)

சுதுமலை-மானிப்பாயில் காயமடைந்தோர்

யாழ்ப்பாணம், மே 26

சுதுமலை, மானிப்பாய் பகுதியில் நேற்று பொம்மர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:

இராசா ஆச்சிமுத்து (வயது 50 சுதுமலை) ஐ மன்மதராசா (வயது 54 சுன்னாகம்) சோமசுந்தரஐயர் ஏகாம்பர ஐயர் (வயது 34 சுதுமலை) மனோகரன் நாகேஸ்வரி (வயது 32 மயிலிட்டி) மகேஸ்வரன் வாசுதேவன் (வயது 21 சுதுமலை) திருநாவுக்கரசு ஞானதாசன் (வயது 15 சுதுமலை) வீரசிங்கம் அன்னக்கிளி (வயது 85 சுதுமலை) எஸ் சிவராசசிங்கம் (வயது 50 சுன்னாகம்) அருச்சுனன் ஜெயதாஸ் (வயது 22 சுன்னாகம்) எஸ் ராஜேந்திரன் (வயது 30 சுதுமலை) சந்திராதேவி (வயது 32 சுதுமலை) அழகராணி (வயது 50 சுதுமலை) நாகேஸ்வரி (வயது 31 சுதுமலை)

(உ-10-7)

ஆறு பொம்மர்கள்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட கோழிகளும் ஆடு ஒன்றும் கொல்லப்பட்டன.

இந்த வீட்டினுள் நின்றோர் பாதுகாப்பு இடங்களை நோக்கி ஓடிக் கொண்டிருக்க பொம்மர் விமானங்கள் அவர்களைத் துரத்தித் துரத்தி தாக்கின.

மகேஸ்வரன் என்பவரது வீடு, அதன் அருகில் உள்ள அரிசி ஆலை என்பனவும் பலத்த சேதமடைந்தன.

மானிப்பாயில் ஒருவர் பலி

மானிப்பாய் பகுதியில் நடைபெற்ற குண்டு வீச்சுக்களின் போது ஒருவர் கொல்லப்பட்டார் மற்றும் பலர் காயமடைந்தனர்.

இங்கு பல வீடுகள் கடைகள் பலத்த சேதமடைந்தன

மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்திற்கு இடது புறமாக உள்ள 'உறுதியின் உறைவிடம்' நூல் நிலையத்திற்குள் விழுந்த குண்டினால் அங்கு நின்ற தொழிலாளி ஒருவரே மரணமானர். அதனுள் இருந்த நூல்கள் தளபாடங்கள் பலத்த சேதமடைந்தன.

அந்தோனியார் ஆலயத்திற்கு வலது பக்கம் அமைந்துள்ள பாதிரிமார் விடுதியும் அதன்முன் உள்ள மாடிக் கட்டடம் ஒன்றும் பலத்த சேதமடைந்தன.

அந்தோனியார் ஆலய வளவினுள் நின்ற மரங்களும் முறிந்தன. மதில்களும் உடைந்தன.

மானிப்பாய் சந்தியில் உள்ள பல கடைகளும் சேதமடைந்தன.

80 இற்கும் அதிகமான குண்டுகள் இப்பகுதியில் வீசப்பட்டன. விமானத் தாக்குதலைத் தொடர்ந்து ஹெலித்தாக்குதலும் நடத்தப்பட்டது.

மேற்படி சம்பவங்களில் காயமடைந்தோர் மானிப்பாய், யாழ்ப்பாண ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரியில் இருமுறை தாக்கு

சாவகச்சேரிப் பகுதியிலும் நேற்று இரு தடவைகள் பொம்மர் தாக்குதல்கள் நடைபெற்றன.

நேற்று மாலை சுமார் 4 மணியளவில் சீ பிளேன் ஒன்று வட்டமிட்டுச் செல்ல இரண்டு பொம்மர்கள் ஒரு ஹெலி என்பன சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்குச் சமீபமாக உள்ள குடிமனைகள் மீது தாக்குதல்களை நடத்தின.

பின்னர் மாலை 6 மணியளவில் வந்த நான்கு பொம்மர்கள் அதே இடத்தைத் தாக்கின இந்தத் தாக்குதல்களினால் பல வீடுகள் சேதமுற்றன இதே வேளை கண்டி வீதியால் சென்றுகொண்டிருந்த வயோதிபர் ஒருவர் இத் தாக்குதலினால் கொல்லப்பட்டார்.

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை ஸ்தாபனமும் சேதமடைந்ததுடன் அங்கு கடமையாற்றும் இரட்ணராசா நடராசா (வயது 35) என்பவரும் படுகாயமடைந்தார்.

வேலணையில் 2 குதிரைகள் பலி

வேலணையில் நேற்று மாலை 4-30 மணியளவில் திடீரென நான்கு பொம்மர்களும், ஹெலிகொப்டர் ஒன்றும் வட்டமிட்டன.

அவற்றில் இரண்டு பொம்மர்கள் அடுத்தடுத்து எட்டுக்கும் மேற்பட்ட குண்டுகளை வேலணைப் பகுதியில் பொழிந்தன.

இதனல் காவலூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினத்தின் வீடு முற்றாகச் சேதமுற்றது இந்த வீட்டுக்கு அருகில் இருந்த ஓலைக் கொட்டில் ஒன்று முற்றாகத் தீப்பற்றி எரிந்தது

இந்த வீட்டில் இருந்த இரண்டு குதிரைகள் பலியாகின.

இந்த வீ [illegible] பர்வதநேசன் (வயது 8) என்ற சிறுமி காயமடைந்தார், இவர் தற்போது யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறர்

(அ-உ-10-7-143-167)

காமினிக்கு வந்த பாராட்டுக் கடிதங்கள்

கொழும்பு, மே 26

தமிழ் நாட்டு மண்ணில் இருந்து முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரனைத் தாக்கிப் பேசியதற்காக எனக்குப் பாராட்டுக் கடிதங்கள் ஏராளமாக வந்திருக்கின்றன

இப்படி அமைச்சர் காமினி திஸநாயகா தெரிவித்தார்.

ஜே வி. பியினர் இப்போது தீவிரவாதிகளுடன் பகிரங்கமாக இணைந்து செயல்படுகின்றனர்.

இளம் பிக்குகளும் இவர்களுடன் சேர்ந்துள்ளனர்

தமிழ்த் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை இன்று கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது.

1971-இல் சிங்கள தீவிரவாதிகள் சிலர் ராணுவத்தில் பதுங்கியிருந்தனர்.

ஆனல், தமிழ்த் தீவிரவாதிகள் இன்று தமிழ் நாட்டில் அல்லவா இருந்து செயல்படுகின்றனர்

இப்படி அமைச்சர் தெரிவித்தார்

(இ-ஏ)

தமிழ்நாடு அரசு மேலும் 8 கோடி ரூபா வழங்கத் தயார்

சென்னை, மே 26

இன்னல் அடையும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு இதனுடன் நான்கு கோடி ரூபா (இலங்கை நாணயத்தில் சுமார் 8 கோடி ரூபா) உதவி வழங்க தமிழ் நாடு அரசு தயாராக உள்ளது.

இப்படி அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

ஏற்கனவே வழங்கப்பட்ட உதவி தமிழர்களை எப்படி போய்ச் சேரும் என்று கேட்கிறர்கள். அது இரகசியம் -

இப்படி அமைச்சர் மேலும் சொன்னர்

(இ-ஏ)

தமிழக நிதி உதவியை பிறநாட்டுக்கு எடுத்துச் செல்ல மத்திய அரசு அனுமதி தேவை

சென்னை. மே 26

தமிழ்நாடு அரசு இலங்கைத் தமிழ் புனர்வாழ்வு அமைப்புகளுக்கு வழங்கிய நிதி உதவி சாதாரண நடைமுறைகளுக்கு மேல் வழங்கப்பட்டது. அந்த நாட்டைவிட்டு வெளியே எடுத்துச் செல்வதாயின் வழக்கமான நடைமுறைகளின்படி மத்திய அரசின் அனுமதி பெறவேண்டும்.

இப்படித் தமிழக அரசு நேற்று விடுத்த உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றில் தெரிவித்தது.

அரச நிதியிலிருந்து இந்த உதவி வழங்கப்படவில்லை தமிழக அரசு மக்களிடமிருந்து தனிப்பட்ட முறையில் பிரத்தியேக நிதியிலிருந்தே இந்த உதவி வழங்கப்பட்டது.

பணம் போராளிகள் அமைப்புகளுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படுவதும் தவறு.

ஆகவே இந்த உதவியைப் புனர்வாழ்வு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கு மாநில அரசு, மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டியது அவசியம் அல்ல - இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (உ)

சுண்டிக்குளி நல்லூர் மினி பஸ் சேவை

யாழ்ப்பாணம்' மே 26

சுண்டிக்குளியிலிருந்து கச்சேரியூடாக நல்லூர் வரையான உள்ளூர் மினி பஸ் சேவை யாழ்மாநகர ஆணையாளர் திரு சி வி. கே. சிவஞானத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுண்டிக்குளியிலிருந்து புறப்படும் மினிபஸ் கச்சேரி நல்லூர் வீதி வழியாக நல்லூர் வந்து திரும்பவும் அதே வழியாக சுண்டிக்குழி சென்றடையும் இச்சேவை அரை மணித்தியாலத்திற்கு ஒரு முறை நடைபெறும்.

இச்சேவை பாடசாலை மாணவர்கள், அலுவலக ஊழியர்கள் பொது மக்கள் ஆகியோர் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ)

கொழும்பில் 10 தமிழர் கைது

கொழும்பு, மே 26

கொழும்பு மாநகரில் புறக்கோட்டைப் பொலிஸார் பத்து தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் இந்த இளைஞர்கள் என்று அறிவிக்கப்படுகிறது

இவர்கள் தீவிரவாத சந்தேக நபர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ ஏ)

பம்பாய் ...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யான கார்டுகள் அவசியம் தேவை.

28ஆம் திகதி அராலி கேற்கு தாக்கி சமாதானத்தில் அடையாள கார்ட்டுகளை விநியோகிப்பதற்கான ஒழுங்குகளை கமநலசேவை அதிகாரிகள் மேற்கொள்வார்கள்.

பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் நன்மை கருதி இலங்கை வங்கி அதிகாரிகள் ஜூன் முதலாம் திகதி அராலிக் கமநலசேவை நிலையத்தில் உற்பத்தியாளர்களைச் சந்தித்து விண்ணப்பப் படிவங்களை விநியோகிக்க வுள்ளனர்.

இவ்வாறு ஏகராசா மேலும் தெரிவித்தார்

(இ - ஏ)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 892/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி:26-05-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 892/2, Navalar Road, Jaffna on Tuesday May 26, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87.

வல்வையில் ஷெல் தாக்குதல்

வல்வெட்டித்துறை, மே 26

கடந்த ஞாயிறு இரவு வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து குடியிருப்புகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இவற்றில் இரண்டு ஷெல்கள் வல்வை, திருவில் என்னும் இடத்தில் உள்ள சின்னத்துரை சிவகணேஷ் என்பவரின் வீட்டின் ஒரு பகுதியில் விழுந்து வெடித்தன.

இன்னொரு ஷெல் அடுத்த காணியில் விழுந்து வெடிக்காத நிலையில் இருந்தது

வடமராட்சிப் பகுதியில் திடீரென்று ஏற்பட்ட மின்தடையைத் தொடர்ந்து அவ்ரோ விமானம், ஹெலிக்கொப்டர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டன. (இ-ஏ-160)

தேங்காய் பறிக்க அச்சம்

கொடிகாமம் மே 26

வானத்தில் ஹெலியும் பொம்மர்களும் அடிக்கடி தற்போது சுற்றித் திரிவதால் தென்மராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள தென்னந் தோட்டங்களில் தேங்காய் பறிக்கும் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

(இ-75)

நகரில் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகி இறந்தது.

இச்சிறுமியின் தாயான ஜெயகுமாரி (30 வயது) தலை சிதறிப் பலியானர்

சிவம் சரசு (10வயது) இன்னாசிமுத்து அர்ச்சி (19 வயது) ஆகிய இரு இளம் பெண்களும் உடல் சிதறிப் பலியானர்.

அன்ரன் இலங்கேஸ்வரன் (12 வயது) என்ற சிறுவனும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டார்.

அன்ரனி சில்வியா அல்லது மயூரன் என்ற நான்கு வயதுச் சிறுவன் தொடை இழந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் மரணமானன்.

காயமடைந்தோர்

இச்சம்பவத்தில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:

அந்தோனி பாமினி (9 வயது) அன்ரன் ரெக்ஷன் (ஒன்றரை வயது) அன்ரன் கொன்ஸ்டைன் இராஜ்மோகன் (3வயது) இன்னாசிமுத்து பபிதா (5 வயது) ஆகியோரும் படுகாயமடைந்தனர்.

(உ-10)

பொருளாதாரத் தடை பிஜி மீது விதிக்க ராஜீவ் கோரிக்கை

புதுடில்லி, மே 26

பிஜியில் ஜனநாயகம் மீண்டும் நிலைநிறுத்தப்படும்வரை அந் நாட்டின் மீது சர்வதேச பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இப்படிக் கோரிக்கை விடுத்திருக்கிறர்.

பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட தூதுவராக அவுஸ்திரேலியாவுக்குச் சென்றிருக்கும் இந்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வரோடா பலேரோ அவுஸ்திரேலியப் பிரதமர் பொப் ஹொக்கிடம் ராஜீவின் விசேட கடிதம் ஒன்றை ஒப்படைத்தார்

அந்த கடிதத்திலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

எட்ரோடா பலேரோ இதுபோன்ற மற்றொரு கடிதத்தை நியூஸிலாந்துப் பிரதமர் டேவிட் லாங்கேயிடம் வெலிங்டனில் வைத்து இன்று கையளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

ஷெயில்சிங்கை கருணநிதி சந்தித்தார்

சென்னை, மே 26

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு கருணநிதி நேற்று சென்னைக்கு வந்த ஜனதிபதி ஷெயில் சிங்கைச் சந்தித்துப் பேசினர்.

சுமார் அரை மணித்தியாலம் இச் சந்திப்பு நீடித்தது

ஆரம்பத்தில் ஜனதிபதி, வல்லம் என்னும் இடத்தில் பெரியார் தொழில் நுட்பக் கல்லூரியில் மணிமண்டபத்தைத் திறந்து வைத்தார்.

பின்னர் தஞ்சையில் சமநீதி மாநாட்டில் கலந்து கொண்டு ஜனதிபதி பேசினர். (இ-ஏ)

பதுங்குகுழியி ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'அபேஸ்' செய்யப்பட்டனவாம்.

இந்தக் குடும்பத்தின் ஏழு அங்கத்தவர்களும் படையினரால் கொடூரமான முறையில் கொல்லப்பட்டது தெரிந்ததே.

அந்தக் குடும்பத்தினரின் இறுதிக்கிரியைகள் நடைபெற்றபோது -- சூழ இருந்தவர்கள் சோகத்தில் மூழ்கி இருந்த வேளை -- அவ் வீட்டில் உள்ள ஒலிப்பதிவுக் கருவி, வானெலிப் பெட்டி, டெக் முதலியன சிலரால் அபேஸ் செய்யப்பட்டன.

இதே போன்று வளலாய்ப் பகுதியில் இராணுவம் முகாமை விட்டு முன்னேறி வருவதை கேள்வியுற்று மக்கள் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு வீட்டை விட்டு ஓடியபின்னர், அந்த வீடுகளில் இருந்த பெறுமதி மிக்க பல பொருட்கள் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-119)

அமெரிக்கத் தளம் கிறீஸில் தொடர்ந்து இருக்குமா?

ஏதென்ஸ், மே 25

கிறீஸில் அமெரிக்கத் தளம் குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னரும் நீடிக்கப்பட வேண்டுமா? என்பதுபற்றி மக்கள் கருத்தறிய சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கிறீஸ் பிரதமர் பாப்பன்ரியோ இத்தகவலை நாடாளுமன்றத்தில் கடந்த ஞாயிறு வெளியிட்டார்

கிறீஸில் உள்ள அமெரிக்கத் தளங்கள் 1988 உடன் வெளியேற வேண்டும். தொடர்ந்து கிறீஸில் அமெரிக்கத் தளம் அங்கு இயங்குவது குறித்து மக்கள் கருத்தைப் பெற்ற பின்னரே அனுமதிக்கப்படும்.

எனது பிரதமர் பதவிக்காலம் 1989 இல் முடிவடையும். அதற்கு முன்னர் இது சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பை நான் நடத்தத் தீர்மானித்துள்ளேன். —

இப்படிப் பிரதமர் பாப்பன்றியோ தெரிவித்தார்.

(இ-ஏ)

அக்கியூனேவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

மணிலா, மே 25

ஜனதிபதி அக்கியூனே கொரஸினேவுக்கு எதிரான பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்று மணிலாவில் கடந்த ஞாயிறு பொலிஸாரினால் கலைக்கப்பட்டது

கொரஸினேவை ஜனதிபதி பதவியில் இருந்து விலக்கி, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் என்றிலை பதவியில் அமர்த்துமாறு இராணுவத்தினரைக் கோருமுகமாக இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது

சுமார் 10 ஆயிரம் பேர் வரை இதில் கலந்து கொண்டனர்

பொலிஸார் ஊர்வலத்தை இடையில் தடுத்து நிறுத்தினர்.

கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர்.

கலைந்து சென்ற மக்கள் மத்தியில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் என்றில் பேசினர்.

(இ-ஏ)

இட்லிச் சட்டிக்கும் சூடு!

யாழ்ப்பாணம், மே 26

இட்லிச் சட்டியைக் கூட ஹெலி நேற்று விட்டுவைக்கவில்லை!

சுதுமலையில் போராளிகளுக்கு எதிராக நடத்திய தாக்குதலின்போது கதிரை ஒன்றின்மீது கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த இட்லிச் சட்டி மீதும் ஹெலி சரமாரியாகச் சுட்டுத்தள்ளியது.

சுதுமலையில் உள்ள மாணிக்கம் மணிவாசகம் என்பவரது வீட்டில் இருந்த இட்லிச் சட்டிக்கே இந்தக் கதி ஏற்பட்டது.

அதன் பின்புறம் உருப்படியாக இருக்கவில்லை! அதை ஒரு மனிதனின் தலை என நினைத்து ஹெலிகொப்டர் அதனைத் தாக்கியிருக்கலாம் என திருமதி மணிவாசகம் தெரிவித்தார்.

அந்த சட்டியில் சுமார் 10 தடவைகள் சுடப்பட்ட துவாரங்கள் தென்பட்டன

(அ-7)